**செய்தி வெளியீடு எண் : 1321** **நாள் : 06.07.2023**

**சென்னையில் நடைபெறவுள்ள ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023 போட்டியினை சிறப்பாக நடத்துவது தொடர்பாக தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக 12 கோடி ரூபாய்க்கான காசோலையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளிடம் வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023 –2024 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற மானியக் கோரிக்கையின் போது 15 ஆண்டுகளுக்குப் பிறகு 2023ம் வருடம் ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி சென்னையில் மீண்டும் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் சர்வதேச அளவிலான ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி – 2023 நடத்திட தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 17.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023 போட்டிகள் சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூபாய் 16 கோடி மதிப்பீட்டில் முதன்மை ஹாக்கி செயற்கை இழை ஆடுகளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை இழை ஆடுகளம் மற்றும் இணைப்புபணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர்மாடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிறசீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்த போட்டிகளை சிறப்பாக நடத்துவது தொடர்பாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு உயர் அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் இந்த போட்டிகளில் பங்கேற்க வருகின்ற சர்வதேச ஹாக்கி வீரர்கள் தங்கும் நட்சத்திர விடுதிகள், உணவு, போக்குவரத்து வசதிகள், மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர். இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பகிர்மானக் கழக தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறையின் அரசு முதன்மை செயலாளர்

திரு. க. மணிவாசன், இ.ஆ.ப., வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மேலாண்மை இயக்குநர் திரு. கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அரசு செயலாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., பொதுத் துறையின் அரசு செயலாளர் திரு. கே. நந்தகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி. இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சியின் கூடுதல் ஆணையர் திரு.சங்கர்லால் குமாவத் இ.ஆ.ப., செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு. த. மோகன், இ.ஆ.ப., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. எம். அருணா, இ.ஆ.ப., பெருநகர சென்னை காவல் துறை ஆணையாளர் திரு. சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப., தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர். டி. எஸ். செல்வ விநாயகம், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு. ஜி. அறிவொளி, கல்லூரி கல்வி இயக்குநர் திருமதி கோ. கீதா, ஹாக்கி இந்தியா தலைமை நிர்வாக அதிகாரி திருமதி எலினா நார்மன், ஹாக்கி இந்தியா, பொது செயலாளர் திரு. போலாநாத் சிங், ஹாக்கி இந்தியா நிர்வாக இயக்குநர், திரு. ஸ்ரீவஸ்தவா, ஹாக்கி இந்தியா பொருளாளர் திரு. சேகர் மனோகரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் – 2023 போட்டியினை நடத்துவதற்காக அரசின் நிதியுதவியாக 12 கோடி ரூபாய்க்கான காசோலையினை ஹாக்கி இந்தியா, பொதுச் செயலாளர் திரு. போலாநாத் சிங் அவர்களிடம் வழங்கினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in